**லெகோ புறஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2021**

----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

லெகோ புறஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (**"**கம்பனி") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மைகள்**

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.1 இன் மீது எனது கவனத்தை செலுத்துகிறேன்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்காய்விற்கான ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்பட ாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இருப்பு | 12,141,603 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதி ரூபா 12,141,603 ஆக காணப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>எந்த செயற்பாடும் காணப்படாததால் முன்னைய | 1) வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>2) நிறுவனத்தின் வளங்கள் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்காய்வாளரின் அறிவுறுத்தலின் கீழ் நாங்கள் நட்டக்கழிவிற்கான ஏற்பாட்டை மேற்கொண்டோம். இருப்பு நட்டக்கழிவு ரூபா 12,141,063 ஆகும்.<br><br>2022.05.26 இல் உங்களுக்கு வழங்கப்பட்ட நட்டக்கழிவு கணிப்பீடு உள்ளது. நட்டக்கழிவிடப்பட்ட கையிருப்பு பயன்படுத்தப்படாத போதிலும் எமது பண்டாரகம வளாகத்தில் உள்ளது. | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 5,159,044 | நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5,159,044 ஆக இருந்ததுடன் இவை அனைத்தும் 2013 முதல் விளைவற்றிருந்தன. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1) வருடாந்த பொருள் மெய்மையாய்வ நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>2) நிறுவனத்தின் வளங்கள் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள் வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 328,912 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 376,206 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 705,118 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான நிர்வாக செலவினத்தில் அதிகரிப்பு மற்றும் ஏனைய வருமானம் காணப்படாமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் நடைமுறை விகிதம் 0.93 இலிருந்து 0.89 வரை குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பங்கு மூலதனம் ரூபா 25,001,000 ஆக இருந்தது. மொத்த பங்கு மூலதனத்தில் ரூபா 25,000,000 தொகையானது 2012 இல் லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் முதலீடு செய்த மின்கம்பங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்துடன் தொடர்புடையதாகும். 2013 ஆம் ஆண்டில் கம்பனி தர பரிசோதனையில் தோல்வியடைந்ததால் மின்கம்பங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தியிருந்ததுடன் கம்பனி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 25,962,616 திரண்ட நட்டத்தை பதிவுசெய்திருந்தது. எனினும், கடந்த சில ஆண்டுகளாகவும் மீளாய்வாண்டிலும் எந்த நடவடிக்கையும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியின் வணிகத் திட்டம்/ முன்மொழிவு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி 2008 இல் வணிகத்தைத் தொடங்கியது. 2008 முதல் 2011 வரை, கம்பனி இலாபத்தைப் பதிவு செய்தது. ஆனால் சில தொழில்நுட்ப கோளாறுகளால் மின்கம்ப உற்பத்தி தோல்வியடைந்தது. இதன் விளைவாக, 2012 முதல் 2015 வரை, கம்பனி நட்டத்தைச் சந்தித்தது. 2016 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நட்டங்களை தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் சிறிய வேலைகளை மேற்கொள்ள முடிவு செய்ததுடன் திரண்ட நட்டங்களைத் தணிப்பதற்கு சில சிறிய வேலைகள் எடுக்கப்பட்டன. எனினும், தற்போது கம்பனி வணிக நடவடிக்கைகளை ஒரு நிறுவனமாக நடாத்துவதற்கு ஒரு சிறிய இலாபத்தை பேணுகிறதுடன் மேற்படி சூழ்நிலைகளின் விளைவாக ரூபா 25,962,616 திரண்ட நட்டம் ஏற்பட்டது. மேலும், கம்பனி 2022 ஆம் ஆண்டில் திடக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் என்ற விசேட செயற்திட்டத்தை மேற்கொண்டுள்ளது, இதன் கிரயம் ரூபா 28.34 மில்லியனாக உள்ளதுடன திரண்ட நட்டத்தை குறைப்பதற்கு ரூபா 6.5 மில்லியன் இலாபத்தை எதிர்பார்க்கிறது. | 1) நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு மின்கம்பங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>2) முதலீடு சரியான மதிப்பீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5,159,044 ஆக காணப்பட்டதுடன் இந்த சொத்துக்கள் அனைத்தும் 2013 முதல் விளைவற்றிருந்தன. | நாங்கள் செயற்பாடுகளை கொண்டிருக்காததால் இந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதில்லை, ஆனால் இந்த சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளன. | நிறுவனத்தின் வளங்கள் ஆகக்கூடிய நலன்களை பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் அத் தேவைப்பாட்டுடன் இணங்க முடியவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

### 4.2 ஆண்டறிக்கை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | லெகோ புறஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்பது லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 100% பங்கு உரிமையுடன் முழுமையாக சொந்தமான துணைக்கம்பனி ஆகும். எனவே, லெகோ புறஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக்கூற்று லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டு ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

### 4.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 இல் வெளியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் எதிர்கால வழிகாட்டல் தொடர்பான மூலோபாயங்களை கூட்டிணைந்த திட்டம் ஒருங்கிணைக்கின்றது. கம்பனி அத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | கம்பனி சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |